OPEN ACCESS

Manuscript ID:
TAM-070320236088

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.10.2022

Accepted: 02.12.2022

Published: 01.01.2023

Citation:
Vinodhini Arivazhagan. "Thirukkural's Life Ethics." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 3, 2023, pp. 29–33.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6088

*Corresponding Author:
avino@ou.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Thirukkural's Life Ethics

**Vinodhini Arivazhagan**
*Lecturer, Department of Language Studies*
*Faculty of Anthropology and Social Sciences*
*Open University of Sri Lanka, Sri Lanka*
*https://orcid.org/0000-0001-5528-861X*

**Abstract**

In the history of Tamil literature, it is most appropriate to call the 'Pathinenkezhkanakku noolgal' as the Sangamaruviya period as "Nyadhi or Charitable Books". The Thirukkural, which is referred to here as the Muppal literature, is described as an Akshaya patra given by the Iradivenpas as 1330 Arumpas by Valluvar Perunthagai. The contents of literature are fundamentally constructive in terms of the individual and the society. But they strongly condemn the opposing views; Valluvar, whether it is an individual life or a society, carries forward the four things and all the aspects required by the man who lives effectively within the class. Therefore, this study is not merely analogous, but the literary treasure of Thirukkural will guide the present life as well. It is noteworthy that this study makes it clear that from any point of view, it is capable of providing a suitable course for the purpose, a suitable answer to any question that is asked, and a suitable solution to any problem that is stated. The basis for the question of the study was whether literature reflected not only the time of their origin, but also whether literatures were constructive, counterproductive, and guiding modern life. The strongest reasons for this are the things that have been said for ages, as well as the prevailing views and conceptions of Thirukkural.

**Key Words:** Creativity, Literature, Opposites, Society, Individual

**References**

1. Parimelazhagar Urai. 2012. *Thirukkural*, Poompuhar Publishing House.
2. Subramanian, S.V. 2002. *Tamil Ilakiya Varalaru*. Chennai, Manivasagar Pathipagam.
3. Kailasapathy, K. 1980. *Pandaya Tamil Samoogam Varalatru Purithalai Noki*, Makkal Veliyeedu.
4. Shanmugam, S.Y. 2002. *Kural Vasippu*, Chennai, Manivasagar Pathipagam.
5. Samy Sitambaranar. 2001. *Valluvar Vazhntha Tamilagam*. Chennai, Manivasagar Pathipagam.
6. Sadasivam, M. 2004. *Valluvar's Ullamum Vazhkai Thathuvamum*. Chennai, Manivasagar Pathipagam.
7. Puliyur Kesikan (Ed.), 2001. *Natrinai Part II*, Reprint, Chennai, Manivasagar Pathipagam.

# திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

*வினோதினி அறிவழகன்*
விரிவுரையாளர்
மொழிக் கற்கைகள் துறை, மானிடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலத்துத் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை "நீதி அல்லது அறநூல்கள்" என்று அழைத்தல் மிகவும் பொருத்தமுடையது. இங்கு முப்பால் இலக்கியமாகக் குறிப்பிடப்படும் திருக்குறளானது ஈரடி வெண்பாக்களால், 1330 அரும்பாக்களாக வள்ளுவப் பெருந்தகை வழங்கிச் சென்றுள்ள ஓர் அட்சயபாத்திரமாக விளங்குகின்றது. இலக்கியங்களின் உட்பொருள் அடிப்படை நோக்கில் தனிமனிதன், சமூகம் என்ற நிலையில் ஆக்கநிலை சார்ந்தவையாகவே இருக்கின்றன. ஆனால், எதிர்நிலை சார்ந்த கருத்துக்களைக் கடுமையாகச் சாடி நிற்கின்றன. "வள்ளுவர் தனிமனித வாழ்க்கை ஆயினும் சரி, சமூகமாக இருந்தாலும் சரி நாற்பொருளினையும் திறம்பட வகுத்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் மனிதனுக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் முன்னிறுத்திச் செல்லுகின்றார். எனவே, இந்த ஆய்வானது வெறுமனே ஒப்புவிப்பதாக அல்லாமல் திருக்குறள் என்ற இலக்கியக் கருவூலமானது தற்கால வாழ்க்கைக்கும் வழிகாட்டும். எந்நோக்கில் இருந்து பார்த்தாலும் அந்நோக்கத்திற்குத் தகுந்த போக்கையும், எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அதற்குத் தகுந்த பதிலையும், எந்தச் சிக்கலைக் கூறினாலும் அச்சிக்கலுக்குத் தகுந்த தீர்வையும் தரவல்லது என்பதனைத் தெளிவுபடுத்துவதாக இவ் ஆய்வு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கியங்கள் தாம் தோன்றிய காலத்தை மாத்திரமே பிரதிபலிக்காமல் இலக்கியங்கள் ஆக்கநிலை, எதிர்நிலை நின்று, தற்கால வாழ்க்கைக்கும் வழிகாட்டுகின்றனவா என்பது ஆய்வுப் பிரச்சினைக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. காலாகாலமாகக் கூறப்பட்டுவந்த விடயங்களும், திருக்குறள் தொடர்பான மேலோட்டமான பார்வையும், கருத்தாக்கங்களுமே இதற்கான வலுவான காரணங்களாக அமைகின்றன.*

***திறவுச் சொற்கள்:*** *ஆக்கநிலை, இலக்கியம், எதிர்நிலை, சமூகம், தனிமனிதன், முதலாந்தர இயங்கி*

## அறிமுகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க மருவிய காலத்துத் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை "நீதி அல்லது அறநூல்கள்" என்று அழைத்தல் மிகவும் பொருத்தமுடையது. இவற்றுள் பன்னிரண்டு நூல்கள் அறத்தையும் எஞ்சிய ஆறு நூல்கள் நீதியுடன் கூடிய அகவுணர்வுப் பாடல்களாகவும் அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது. இங்கு முப்பால் இலக்கியமாகக் குறிப்பிடப்படும் திருக்குறளானது ஈரடி வெண்பாக்களால், *1330* அரும்பாக்களாக வள்ளுவப்பெருந்தகை வழங்கிச் சென்றுள்ள ஓர் அட்சயபாத்திரமாக விளங்குகின்றது. இலக்கியங்களின் உட்பொருளானது அடிப்படை நோக்கில் தனிமனிதன், சமூகம் என்ற நிலையில் ஆக்கநிலை சார்ந்தவையாகவே இருக்கின்றன. ஆனால், எதிர்நிலை சார்ந்த கருத்துக்களைக் கடுமையாக சாடி நிற்கின்றன. மனிதன் தன் இனத்தோடு கூடிவாழக் கற்றுக்கொண்ட காலத்தில் உண்டான மாற்றங்கள், வளர்ச்சிகள், ஒற்றுமைகள், முரண்பாடுகள், கோட்பாடுகள், நம்பிக்கைகள்

ஆகியவற்றை ஒருங்கியைந்து மனித இனப்பண்பைக் கூறுவது சமூகம் ஆகும். இதில் குடும்பமானது, சமூகவியலின் அடிப்படையிலே முதலாந்தர இயங்கியாகச் செயற்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்ட வள்ளுவர் தனிமனித வாழ்க்கை ஆயினும் சரி, சமூகமாக இருந்தாலும் சரி நாற்பொருளினையும் திறம்பட வகுத்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் மனிதனுக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் முன்னிறுத்திச் செல்லுகின்றார்.

**திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்**

ஒரு சமூகத்தில் தனிமனித முன்னேற்றத்தை சமூகத்தின் முன்னேற்றமாகக் கருதும் திருவள்ளுவர், தான் பேசுகின்ற ஒவ்வொரு விடயங்களையும் நடைமுறையுடன் கூடியதாகவும் வாழ்க்கையை உயர்ந்ததாகவும் இனியதாகவும் ஆக்கிக் கொள்வதற்குப் பயன்படும் ஒரு பண்பாட்டு வழிகாட்டியாகவே திருக்குறளினைத் தந்துள்ளார். சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் பெற்றுக்கொள்ளும் அங்கத்துவத்துக்கு ஏற்ற நெறிமுறைகளை முன்வைத்துச் செல்லும் வள்ளுவன் தனியொருவனுக்கு உரித்தான இன்பவாழ்வினையும் அதற்குத் துணையாக அமைகின்ற பொருளியல் வாழ்வினையும் முன்னிறுத்துவதோடு அமையாது இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது அறவாழ்வு என்பதனை அழகாக விளக்கிச் செல்லுகின்றார். ஈகை என்பது பிறருக்குக் கொடுத்தலும் அதனால் ஏற்படுகின்ற மனமகிழ்ச்சியும் ஆகும். இச்செயல் மகிழ்ச்சியை மட்டுமன்றி அவனது மனிதப் பண்பினையும் உணர்த்தி நிற்கும். இவ்வாறு பிறருக்குக் கொடுக்கின்ற போது போட்டி, பொறாமை, அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ணங்கள் இல்லாது ஒழிந்து பக்குவம் அடைந்தவனாக மாண்புடையவனாக அவன் மாறுகின்றான்.

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல**
**ஊதியம் இல்லை உயிர்க்கு"**

**(குறள்.231)**

என்ற அடிகள் ஈகைக் குணமே உயிரின் ஊதியம் என்கின்றது. இதன் மூலம் பிறருக்குக் கொடுத்துப் புகழுடையும் வாழ்க்கையே பயனுடைய வாழ்க்கை என்பதனை சமூகத்திற்கு உணர்த்திச் செல்லுகின்றார்.

மனிதன் இன்றைய காலகட்டத்தில் "பசுத்தோல் போர்த்திய புலியாக" நடமாடுகின்றான். அவன் பண்பாட்டின் உச்சம் என்பது நாகரிகம் என்ற பெயரில் தனக்குத்தீமை செய்தவரைப்பழிவாங்குதல், வெளிப்படையாக எதனையும் கூறாமல் இருத்தல், அன்பிற்கு மதிப்பளியாமை, கொடூரமானவர்களாகத் திரிதல் என்பனவே எனக் கருத்திற் கொண்டுள்ளான். இந்நிலையே வாழ்வியல் நெறிமுறைகளை மறப்பதற்கும் மறுதலிப்பதற்கும் காரணமாக அமைகின்றது. மனித சமூகம் உலகத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்குச் செல்வம் இன்றியமையாதது என்பது உண்மை. செல்வம் உடைய மனிதனுக்குச் சமூகத்தில் மதிப்பும் செ வாக்கும் கிட்டும். இவ்விரண்டையும் அறத்தினால் மட்டுமே அடையமுடியும் என்பதை,

**"சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு"**

**(குறள்.31)**

என்னும் குறள் எடுத்துரைக்கிறது. எவனொருவன் தான் செய்யத் தொடங்குகின்ற செயல் சிறப்பாக அமையவேண்டும் என எண்ணுகின்றானோ அவனுடைய வெற்றிக்கு அவனது சிந்தனையும் செயலுமே காரணமாக அமைகின்றன. இது செயலின் வெற்றி மனத்திடத்திலேயே தங்கியுள்ளது என்பதனைப் புலப்படுத்துகின்றது. இங்கு உள்ளத்தூய்மை மிக முக்கியமானதொன்றாக அமைகின்றது. தூய உள்ளமே இறைவன் உறையும் இடம். இதனைப் பூசலார்நாயனாரின் வாழ்க்கை எமக்குப் பறைசாற்றுகிறது. இன்றைய காலகட்டத்தில் புறத்தூய்மையில் நாட்டமுடைய சமூகம் அகத்தூய்மையை மறந்து விடுகின்றது. மனிதனானவன் அகத்தூய்மையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனைப் பின்வரும் திருக்குறள் விளக்குகிறது.

"மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

(குறள்.34)

நட்பானது வெவ்வேறு சமூகத் தளத்தில் இருப்போரையும் அச்சமூகத்தினையும் மொழி, இனம், நாடு, மதம் கடந்து உணர்ச்சியோடு பிணைப்பதாக அமைவதாகும். இதனை வள்ளுவர்,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்" (குறள்.785)

என்று குறிப்பிடுவதோடு நட்பின் வலிமையே உணர்ச்சிதான் என வலியுறுத்துகின்றார். இங்கு உணர்ச்சி என்று அவர் கருதுவதாவது, நட்பின் ஊடாக ஏற்படும் மனமகிழ்ச்சி அல்ல. மாறாக தவறு நேரும்போது இடித்துரைத்தலும் யாருடைய அனுமதியுமின்றி உதவுதலுமே நட்பு. இங்கு மனிதநேயத்தினை வாழ்வியல் நெறியாகக் காட்டிச்செல்வது விதந்து கூறத்தக்கது. அதாவது உள்ளன்போடு கொண்ட நட்பு என்றைக்கும் தோற்றுப் போவதில்லை என்பதனை ஆழமாகக் குறிப்பிடுகின்றார்.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்" (குறள்.580)

என்ற அடிகள் இதற்குச் சான்று பகர்கின்றது. இதனை நற்றிணைப் பாடலடி,

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

(நற்றிணை.355)

எனக் குறிப்பிடுகின்றது.

கருத்துப் பரிமாற்றத்தின் கருவியாக விளங்குவது மொழியாகும். சினம் ஏற்பட்டால் வெளிவரும் வார்த்தைகள் கூட இனிய சொற்களாக அமையாது. எனவே, சினத்தை அடக்க வேண்டும். அத்தோடு நாவையும் அடக்க வேண்டும்.

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனம் என்னும்
ஏமப் புணையச் சுடும்" (குறள்.306)

சினமானது இன்னார் - இனியார் பற்றியோ நன்மை - தீமை பற்றியோ ஆராய்வது இல்லை. சினம் கொள்பவரையும் அழித்து அவரைச் சார்ந்திருப்போரையும் அழித்து விடும். எனவே, இச்சினத்தினை அடக்கி நாவைக் காக்க வேண்டும்.

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

(குறள்.127)

எனவே, நாவடக்கம் இல்லாவிட்டால் சொற்குற்றம் ஏற்பட்டுவிடும். சமூகத்தில் பெண்ணானவள் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்வியல் நியதியினை வகுத்திருந்த காலத்தில் ஆண் - பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாகக் காணப்படுகின்றது. காலாகாலமாகப் பெண்களுக்கு மட்டும் கட்டுப்பாடுகள் விதித்த சமூகம் ஆண்களுக்கும் ஒழுக்கத்தை வலியுறுத்தவேண்டும் எனத் திரும்பிப் பார்க்கச்செய்த பெருமையினைத் திருக்குறள் பெற்றுக்கொள்கின்றது. அவரது புரட்சிகரமான நோக்கினால் இன்றைய சமூகத்தில் ஆணுக்குப் பெண் நிகர் என்ற தொனி இன்றும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

வளமான வாழ்க்கைக்குப் பெண்களின் பங்கு மிக முக்கியமானது. இதற்குரிய குணநலன்கள் பெண்களிடம் இல்லாவிட்டால் எந்தப் பயனுமில்லை. இன்றைய இயந்திரமயமான சுழலில் குடும்பத்தின் மகிழ்ச்சி ஆண் - பெண் இருவரதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்
வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

(குறள்.52)

வாழ்வியல், நெறிப்பட்டதாக அமைய வேண்டுமானால் பெண்களினதும் ஆண்களினதும் சமமான ஒத்துழைப்பு மிக முக்கியம் என்பது

தெட்டத்தெளிவாகின்றது. இருபாலாருமே பொறுமை, விட்டுக்கொடுத்தல், சகிப்புத் தன்மை, விருந்தோம்பல், அறம் பேணல் ஆகியவற்றை அதற்கேற்ற தருணத்தில் பின்பற்றிச் செல்லுதல் வேண்டும்.

நாம் வாழும் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் இன்று நேற்றல்ல காலாகாலமாக சாதி, மதத்தின் போர்வையில் நிலவி வருகின்றன. அந்தவகையில், தொழில் ரீதியான வேறுபாடுகளும் நிலவி வந்துள்ளன. இத்தொழில்கள் உடல் உழைப்பு, அறிவுசார் உழைப்பாக இருக்கலாம். இவ்விரு உழைப்பாளர்களிடம் வேறுபாடு வரின் முரண்பாடுகளே ஏற்படும். இத்தகைய முரண்பாட்டினைக் கலைத்தெறிய வேண்டும்.

> ***"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா***
> ***செய்தொழில் வேற்றுமை யான்"***
>
> ***(குறள்.972)***

ஒவ்வொருவரும் தொழிலால் வேறுபட்டவர்களே ஒழிய உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு கருதலாகாது என்பதனை நெறியாகக் காட்டும் திருக்குறள் எல்லாக் காலத்திற்கும் உரிய வாழ்வியலைத் தெரிவிக்கின்றது.

**முடிவுரை**

எனவே, திருக்குறளானது நடைமுறைக்கு ஒவ்வாத நிலையில் இருந்து நோக்காது, மனிதன் தான் வாழும் சமூகத்தில் தனது குடும்பத்தை, உறவுகளை, பொருளாதாரத்தை, தம் மக்களை, ஒற்றுமை, நட்பு போன்ற இன்னோரன்ன அம்சங்களின் அடிப்படையில் மேம்படுத்திச்செல்ல துணைபுரிகின்றது. மனித வாழ்வின் அடிப்படை அம்சமான அன்பினைப் போதிக்கின்றது என்று சொல்வதை விட மனதினில் பசுமரத்தாணி போலப் பதியவைக்கின்றது. சாதி, மத பேதங்களை அடியோடு தகர்த்தெறியும் பாங்கினையும் இன, மொழி, மத பேதம் கடந்து தற்கால வாழ்க்கை நலனையும் படம்பிடித்துக் காட்டுகின்ற பெருமைக்குரிய இலக்கியமாகத் திருக்குறள் விளங்குகின்றது. காலாகாலமாகப் பெண்களுக்கு மட்டும் கட்டுப்பாடுகள் விதித்த சமூகம் ஆண்களுக்கும் ஒழுக்கத்தை வலியுறுத்த வேண்டும் எனத் திரும்பிப் பார்க்கச்செய்த திருக்குறள் சமூகத்தின் அத்தனை உறவுகளையும் தட்டியெழுப்பி உயரிய வாழ்க்கையை நோக்கி நகர்த்துவதற்கான அடித்தளமாக அமைந்து தனிமனித முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே சமூகத்தின் முன்னேற்றம் உள்ளது என்பதனையும், நடைமுறையோடு ஒப்பித்துப் பார்க்கக் கூடியவாறு கருத்துக்களையும் சிறந்த வாழ்வியல் நெறிகளையும் முன்வைத்துத் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1. பரிமேலழகர் உரை. 2012. *திருக்குறள்.* பூம்புகார் பதிப்பகம்.
2. சுப்பிரமணியன், ச.வே. 2002. *தமிழ் இலக்கிய வரலாறு.* சென்னை மணிவாசகர் பதிப்பகம்.
3. கைலாசபதி, க. 1980. *பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி,* மக்கள் வெளியீடு.
4. சண்முகம், செ.வை. 2002. *குறள் வாசிப்பு,* சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
5. சாமி சிதம்பரனார். 2001. *வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்,* சென்னை, மணிவாசகர் பதிப்பகம்
6. சதாசிவம், மு. 2004. *வள்ளுவர் உள்ளமும் வாழ்க்கைத் தத்துவங்களும்,* சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
7. புலியூர்க்கேசிகன் (தெளிவுரை). 2001. *நற்றிணை இரண்டாம் பகுதி,* மறுபதிப்பு, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.